## சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல—

# ஒவ்வொரு மனிதருக்கும் எதிரான அரசு - ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## இப்தார் நிகழ்வில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

சென்னை, மார்ச். 17-

**சென்னை - எழும்பூரில் உள்ள பைஸ் மஹாலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மகளிர் லீக் சார்பில் நடைபெற்ற இப்தார் நிகழ்ச்சி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு, சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“இந்த கூட்டம் என்பது இன்றைய சூழலிலே., நோன்பு திறப்புக்கு கூடிய, பெருவிழா நடக்கக்கூடிய ஒரு கூட்டம் என்பதை தாண்டி... நாம் நம் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளக் கூடிய, நம்முடைய எதிர்கால திட்டங்கள் என்ன என்பதை சிந்திக்க கூடிய ஒரு நோன்பாக- ஒரு கூட்டமாக- ஒரு இயக்கமாக எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு காலகட்டத்திலே நாம் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அத்தனை பேரும் மனதிலே நிறுத்திக் கொள்ள வேண்டும்.

என்னுடைய சகோதரி பாத்திமா முசபர் அவர்கள் நான் வண்டியில் இருந்து இறங்கி உள்ளே வரும்போது எங்களுடைய நிறத்தில் வந்துள்ளீர்கள், மகிழ்ச்சி என்றார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் காலம் தொட்டு எப்போதும் உங்களோடுதான் இருக்கிறேன். கலைஞர் தலைவராக இருக்கட்டும் இன்றைய முதல்வர் அண்ணன் தளபதியாக இருக்கட்டும்... உடை வேறாக இருந்தாலும் மனம் உங்களோடுதான்.

**நம் மொழியை நாம் பாதுகாக்க வேண்டும்!**

திராவிட இயக்கம் என்று சொல்லக்கூடிய அந்த நிலையிலே திராவிட மாடல் என்று நம்முடைய முதலமைச்சர் பெருமிதத்தோடு சொல்லக்கூடிய இந்த நேரத்திலே... தமிழ் அடையாளங்கள், தமிழ் மொழி, தமிழ் பெருமை, தமிழ் பாரம்பரியம் நம்முடைய மொழியை நாம் பாதுகாக்க வேண்டிய அந்த காலகட்டத்தில் நின்று கொண்டிருக்க கூடிய நேரத்திலே... மற்றவர்களை போல இல்லாமல் மொழியோடு சுயமரியாதையோடு- நம் பண்பாட்டோடு கலந்து நின்று அதன் பெருமையை உணர்ந்து இருக்கக்கூடிய மக்களோடு நாங்கள் என்றும் இணைந்து நிற்போம் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்திலே ஒன்றியத்திலே இருக்கக் கூடிய ஆளும் கட்சி பாஜகவுக்கு தெரிந்த அரசியல் என்பது மக்களை பிரித்து வைக்கக்கூடிய அரசியல். மக்களை மொழியால், மதத்தால், ஜாதியால் ஆண்- பெண் என்ற அந்த வித்தியாசங்களை கொண்டு வந்து புகுத்தி... என்னென்ன வகையிலே மக்களை மனிதர்களை பிரிக்க முடியுமோ அதையெல்லாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்க கூடிய ஒரு ஆட்சி தான் ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய பாஜக என்றால் அது மிகையில்லை.

**முத்தலாக்கை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை!**

ஆண் -பெண் என்று எப்படி அவர்கள் பிரிக்கிறார்கள் என்று கேட்டால் நான் ஒரே ஒரு உதாரணத்தை தான் சொல்லுவேன். முத்தலாக். அதை எதிர்த்து ஒரு மசோதாவை கொண்டு வந்தனர். முத்தலாக்கை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அது எல்லோரும் அறிந்த ஒன்றுதான்.

ஆனால் அவர்கள் முத்தலாக்குக்காக ஒரு மசோதாவை கொண்டு வரும் பொழுது, அதிலே முக்கியமான ஒன்றாக என்ன கொண்டு வருகிறார்கள் என்றால்... யாராவது ஒருவர் தன் மனைவியை பார்த்து முத்தலாக் அதாவது இஸ்லாம் ஏற்றுக் கொள்ளாத ஒரு முறையிலே அவர்களை விவாகரத்து செய்யக் கூடிய ஒரு வழியை கடைபிடித்தால், அவர்களை ஒரு ஆண்டு சிறைக்கு அனுப்பக்கூடிய பிரிவை ஒரு ஆயுதத்தை கையில் எடுத்து அவர்கள் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் அந்த மசோதாவை கொண்டு வந்தார்கள்.

நான் நாடாளுமன்றத்தில் இதை எதிர்த்துப் பேசும்போது, ‘இந்த மக்களுக்கு மட்டும் ஏன் இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டுவரப்படுகிறது?’ என்று கேட்டேன். அப்பொழுது எதிரிலே இருந்த அமைச்சர், ‘ஏன் உங்களுக்கு இஸ்லாமிய பெண்கள் மீது அக்கறை இல்லையா?’ என்று கேட்டார்.

நான் அவருக்கு பதிலளித்தபோது, ‘ இஸ்லாமிய பெண்கள் மீது அக்கறை இருக்கிறது. ஆனால் நீங்கள் இஸ்லாமிய பெண்களுக்காக இதை செய்யவில்லை. இஸ்லாமிய ஆண்களை எப்படி எல்லாம் சிறைக்கு அனுப்ப முடியுமோ, அதற்கெல்லாம் வழி தேடிக் கொண்டிருக்கிறீர்கள். தவிர இஸ்லாமிய சகோதரிகளைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் இதை செய்யவில்லை.

ஏனென்றால் கிறிஸ்தவர் ஒருவர் தனது குடும்பத்தை விட்டு விட்டு விலகினால் அவங்களுக்கு ஒரு ஆண்டு சிறை தண்டனை கிடையாது. ஒரு ஹிந்துவோ, வேறு ஒரு மதத்தை சார்ந்தவர்களோ தன்னுடைய குடும்பத்தை விட்டு விட்டு சென்றுவிட்டால் அவர்களுக்கு சிறை தண்டனை கிடையாது. ஆனால் ஒரு இஸ்லாமிய சகோதரர் இதை செய்யும்போது மட்டும் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்றால், ஒரே சமூகத்தைச் சார்ந்த ஒரு குடும்பத்தைச் சார்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஒரு பிரிவை ஏற்படுத்தக்கூடிய கருவியாகத்தான் இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள்’ என்று கூறினேன்.

நம்மைப் பாதுகாக்கிறோம் என்று சொல்லி ஒரு சட்டத்தை கொண்டு வரும் அந்த சட்டம் கூட நம்மை பிளவுபடுத்தக்கூடிய ஒரு சட்டமாகத்தான் இருக்கிறது. ஒரு ஆயுதமாகத்தான் அதைக் கொண்டு வருகிறார்கள்.

**நாடு பற்றி எரியக்கூடிய சி.ஏ.ஏ. சட்டம்!**

இதேபோல நாடே பற்றி எரியக்கூடிய அளவிற்கு சிஏஏ சட்டத்தை கொண்டு வந்தார்கள். சிறுபான்மையின மக்களை ஒடுக்குவதற்காக, அவர்களை ஏதோ இந்த நாட்டின் விரோதிகளை போல சித்தரிக்க கூடியவர்களாக தொடர்ந்து முயற்சிகள் செய்கிறார்கள்.

நான் கேட்கிறேன்... இந்த நாட்டின் விடுதலை போராட்டத்திலே பங்கேற்றுக் கொண்டவர்கள் இஸ்லாமியர்கள். இந்த நாட்டுக்காக உயிரை இழந்தவர்கள் இஸ்லாமியர்கள். இந்த நாட்டின் விடுதலைக்காக சிறை சென்ற ஒரே ஒரு ஆர் எஸ் எஸ் காரரை காட்டுங்கள் பார்ப்போம். ஒரே ஒருவரை சொல்லுவார்கள். அவரும் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து விட்டு வெளியே வந்துவிட்டார். அதற்கு ஒரு நல்ல கதை சொல்லுவார்கள். எனக்கு பிடித்தது அதுதான். சிறையில் இருந்து ஒரு பறவையின் சிறகிலே ஏறி வெளியே வந்தாராராம். இப்படித்தான் கட்டுக் கதைகள் பரப்பப்படுகின்றன.



இந்த நாட்டுக்காக அவர்கள் செய்தது இது ஒன்றுதான். ஆனால் அவர்கள் நம்மைப் பார்த்து தேசவிரோதிகள் என்கிறார்கள், அர்ப்சன் நக்சல் என்கிறார்கள். நம்மை பார்த்து இந்த நாட்டிற்கு நீங்கள் நேர்மையாக உண்மையாக இல்லை என்கிறார்கள். இப்பொழுது கூட ஒன்றியத்தில் இருக்கக்கூடிய ஒரு அமைச்சர் நம்மை பார்த்த நாகரிகமற்றவர்கள் என்று அழைத்தார். அதை கேட்டு பெருமையாகத்தான் இருந்தது.

ஏனென்றால் உங்களுக்கு சிவிலைசேஷன் என்றால் என்னவென்று தெரியாது. அப்படிப் பட்டவர்கள் நம்மை பார்த்து அழைக்கும் பொழுது... 5000 ஆண்டுகளுக்கு முன்னால் தொன்மை வாய்ந்த ஒரு குடியிலே பிறந்த தமிழர்களை பார்த்து, ஒருவர் நீங்கள் அநாகரீகமானவர்கள் என்று அழைக்கும் பொழுது அவர்களுடைய நாகரீகம் இந்த நாட்டின் சரித்திரத்தை பற்றிய அறிவு என்ன என்று நமக்கு தெளிவாக தெரிகிறது.

இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சிறுபான்மையினருக்கு, தமிழர்களுக்கு, ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்கு எதிராக ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கக் கூடியவர்கள், தமிழ்நாட்டுக்கு எதிராக தமிழ் மக்களுக்கு எதிராக நம்முடைய மொழியை நம்முடைய பண்பாட்டு நம்முடைய மாநிலத்தை ஒடுக்கக் கூடிய அளவிற்கு இன்று வளர்ந்து நிற்கிறார்கள் புரிந்து கொள்ள வேண்டியதால் தருணத்திலே நின்று கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, வக்ஃப் போர்டு திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார்கள். அதில் தெள்ளத் தெளிவாக உணர்ந்திருக்கக்கூடிய மிகப்பெரிய ஆபத்து, இஸ்லாமிய சகோதரர்கள் சகோதரிகளுடைய சொத்துக்களை எல்லாம் பாதுகாப்பதற்காக அந்த சட்டத்தைக் கொண்டு வரவே இல்லை. இந்த சொத்துக்களை எல்லாம் பிடுங்கி யாருக்கு கொடுக்கணும் நினைக்கிறாங்க? அந்த இரு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கொடுப்பதற்காகத்தான் அந்த சட்ட மசோதா என்று நமக்கு தெளிவாக தெரியும். அந்த கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எல்லாருடைய உடமைகளையும் பிடுங்கி கொடுத்து விட வேண்டும் என்பதற்காகவே கொண்டுவரப்பட்ட ஒரு மசோதா. அதை நிறைவேற்றி விட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒன்றிய ஆட்சி.

**சிறுபான்மையினருக்கு எதிரான ஒன்றிய பாஜ.க. அரசு!**

இப்படி தமிழ் மாநில உரிமை, சிறுபான்மையினருடைய உரிமை என்று அத்தனைக்கும் எதிராக ஒவ்வொரு நாளும் சட்டங்களை இயற்றி அரசியல் செய்து கொண்டிருக்கக் கூடிய ஒரு இயக்கத்தை எதிர்த்து இன்று இந்த நிகழ்ச்சியை இந்த நோன்பை இந்தக் கூட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இதனை இங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு சகோதரியும் சகோதரனும் உணர்ந்து கொள்ள வேண்டும். இது இன்று முடியக்கூடிய போராட்டம் இல்லை. ஏனென்றால் இது வளர்ந்து விட்டது. இன்று டெல்லியிலே ஆட்சியிலே இருக்கக்கூடிய இடத்திற்கு நாம் அவர்களுக்கு இடம் அளித்து விட்டோம்.

மாற்றம் வரவேண்டும் வரவேண்டும் என்ற ஒரு தவறான செய்தியை புரிந்து கொண்டு அந்த மாற்றத்தை கொண்டு வந்து டெ ல்லியில் அமரவைத்துவிட்டு, இன்று நாடு முழுவதும் தவித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு நிலைக்கு நாம் தள்ளப்பட்டு இருக்கிறோம்

ஊடகங்களில் யாருக்கும் கருத்து சொல்ல கூடிய உரிமை கிடையாது. எல்லா ஊடகங்களும் கார்பரேட் கையில் இருக்கு அந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் ஒன்றிய அரசாங்கத்தின் கையிலே மாட்டிக்கொண்டு முழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால ஊடகத்துறை எதிர் கருத்துக்களை சொல்ல முடியாது. எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் எதிர் கருத்துக்களை சொல்ல முடியாது. கேள்வி கேட்க முடியாது.

எதிர்த்து நிற்கக்கூடிய அரசியல் கட்சிகளுக்கு எல்லாம் ICE என்று டெல்லியில் சொல்கிறார்கள். அதாவது இன்கம் டாக்ஸ், சிபிஐ, இ.டி. இது மூன்றும் அவர்கள் மீது ஏவப்படும். ஏனென்றால் இப்படித்தான் அவர்களை பயமுறுத்தி அச்சுறுத்தி அடக்கிவிட முடியும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அதனால் எதிராக இருக்கக்கூடிய ஒவ்வொரு மாநில அரசின் மீதும் ஒரு வன்முறையை, வெளியே சொல்லாத வன்முறையை, ஒரு புதிய மொழியிலே சொல்லக்கூடிய ஒரு வன்முறையை அவர்கள் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்தல் ஆணையம் என்ன் நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அப்படி ஒரு அவசரத்தோடு தலைமைத் தேர்தல் ஆணையரை இரவோடு இரவாக நியமிக்கிறார்கள். ராகுல் காந்தி அவையிலே பேசும்போதே குறிப்பிட்டார்.

**வாக்காளர் பட்டியல் குளறுபடி!**

‘மகாராஷ்டிரா தேர்தல் நேரத்தில் புனேவில் கிட்டத்தட்ட ஒரே பில்டிங்கில் ஐயாயிரம் பேர் புதிதாக பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்’ என்று. கிட்டத்தட்ட இமாச்சல பிரதேச மக்கள் தொகைக்கு நிகரான ஒரு மக்கள் தொகை புதிதாக மகாராஷ்டிராவில் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படித்தான் தேர்தல் நடந்து கொண்டிருக்கிறது இந்த நாட்டிலே.

சமீபத்திலே மேற்கு வங்காள முதலமைச்சர் அம்மையார் மம்தா பானர்ஜி அவர்கள் ஒரு அதிர்ச்சியை சொல்லியிருக்கிறார். அதாவது நம்முடைய தேர்தல் வாக்காளர் அட்டையில் EPIC நம்பர் என ஒரு நம்பர் இருக்கும். மேற்கு வங்காளத்தில் இருக்கிறவர்களின் அதே எண் ஹரியானாவில், பஞ்சாப்பில், புனேவில் இருக்கிறது. இது எப்படி சாத்தியப்பட்டிருக்கிறது? இப்படி எத்தனை பேர் ஏமாற்றாக இதே வாக்காளர் அட்டையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு என்று வரும் பொழுது... தமிழ்நாடு போல பிஜேபிக்கு வாக்களிக்காத மாநிலங்கள் கர்நாடகா, கேரளா, ஆந்திரா, பஞ்சாப் போன்ற மாநிலங்கள் எல்லாம் தங்களுடைய பிரதிநிதிகளை இழக்க நேரிடும் என்பதை திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் நடக்கக்கூடிய அந்த தொகுதி மறுசீரமைப்பு நடந்தால், இவர்களுக்கு யாரெல்லாம் ஆதரவாக வாக்களிக்கும் உ.பி, ஹரியானா போன்ற மாநிலங்களிலே இருக்கக்கூடியவர்களுடைய எம்பிகள் எண்ணிக்கை அதிகரிக்கும். இவர்களுக்கு எதிராக இருக்கக்கூடிய மாநிலங்களில் இருக்கக்கூடிய எம்.பி.க்களின் எண்ணிக்கை நாடு முழுதும் குறையும் என்பதை மக்களுக்கு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்

எப்படியெல்லாம் மக்களை ஏமாற்ற முடியுமோ, அதிகாரத்தை தன் கையிலே வைத்துக்கொள்ள முடியுமோ அதை எல்லாம் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய பாஜக செய்து கொண்டிருக்கிறது.

அது இந்த நாட்டில் இருக்கக்கூடிய சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல... இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெண்களுக்கு, இந்த நாட்டின் எதிர்காலத்தை கையிலே வைத்துக் கொண்டிருக்க கூடிய இளைஞர்களுக்கு, இந்த நாட்டிலே ஒவ்வொரு மாநிலத்திலும் தன்னுடைய மொழி , பண்பாடு, பாரம்பரியம், தன்னுடைய மூதாதையர் உடைய வரலாறு இவற்றை பாதுகாக்க நினைக்கக்கூடிய ஒவ்வொரு மனிதனுக்கும் எதிரான ஆட்சிதான் ஒன்றியத்தில் இருக்கிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் பின்னால் இருக்கக்கூடிய அத்தனை உரிமைகளையும் பறிக்கக்கூடிய ஒரு அரசாக மாறிக்கொண்டிருக்கிறது என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்த நிலை நீடிக்காமல், அந்த நிலை இந்த நாட்டில் இருந்து அகற்றப்படக்கூடிய நாள் விரைவிலே வரவேண்டும் என்ற நாம் ஒரு போராட்டத்தை முன்னெடுப்போம் என்று சூளுரை ஏற்கக் கூடிய, மனதிலே உறுதி ஏற்கக்கூடிய நாளாக இந்த நோன்பு இருக்கட்டும்.

எல்லோரும் மனிதர்களாக தமிழர்களாக இந்த மண்ணைச் சேர்ந்தவர்களாக அணி திரளுவோம். இதை சொல்லக் கூடிய நாளாக நாம் இந்த நோன்பை மனதிலே ஏற்போம். உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

உடன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தீன், மகளிர் லீக் தேசிய தலைவர் பாத்திமா முசபர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்!

---

### ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு தலைமை – ஆர்.கே.தேவேந்திரன் வரவேற்பு!

## வாலாஜாபாத் வடக்கு ஒன்றியத்தில் முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

### க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! க.செல்வம் எம்.பி. – சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு

*காஞ்சிபுரம், மார்ச் 17 -*

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 18-3-2025 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அண்ணா திடல் ராஜகுளம் இலுப்பப்பட்டு ஊராட்சியில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு ஒன்றிய கழக செயலாளர் படுநெல்லி பி.எம். பாபு தலைமை வகிக்கிறார். ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன் வரவேற்கிறார்.

கே.மணி, வி.மணி, சுகுணா, தேவேந்திரன், எஸ். உலகநாதன், எஸ். பெருமாள், என்.ரவி, எம் தியாகராஜன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார். மேலும் மாவட்ட துணைச் செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி. .வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., (கழக கொள்கை பரப்பு செயலாளர்) தலைமைக் கழக பேச்சாளர் திருப்பூர் மனோகர் பாபு. மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எஸ். ராஜலஷ்மி குஜராஜ். எஸ்.பி பூபாலன், ஒன்றிய அவை தலைவர் பழனி, ஒன்றிய கழக துணை செயலாளர்கள் வி.வெங்கட்ராமன், கவிதா டில்லிபாபு, மாவட்ட பிரதிநிதிகள் கே.ஆறுமுகம், கே.பார்த்திபன், எம்.திருஞானசம்பந்தம்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எம்.அருள்முருகன், என்.ஜெயபால், எஸ். கே.சுரேஷ், ஆர்.கே.சசிகுமார், இ.அப்பன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுனிதா பாபு, லோகநாயகி திருஞானசம்பந்தம், வேண்டாமிருதம் வேதாச்சலம், பி.லோகுதாஸ், கௌரி தியாகராஜன். ஊராட்சி மன்ற தலைவர்கள் டி.என்.ஆறுமுகம், சுமதி ஜெயராமன், காமாட்சி கருணாநிதி, தனலட்சுமி ஜெயவேல், எம். குமார், கே. பலராமன், பி.குமரகுரு சைலஜா பரந்தாமன், ஜி. சுரேஷ்பாபு, சாந்தி சண்முகம், சுமதி விஜயகுமார், மணிமேகலை லோகநாதன், வள்ளியம்மாள் செல்வம், கீதா மகேந்திரன், குமரேசன், ப்ரியா வெங்கடேசன், சரளாதேவி ஏகாம்பரம். மற்றும் கிளைக் கழக செயலாளர். ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள், முன்னணியினர், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டுமாய் ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பாபு கேட்டுக்கொண்டுள்ளார்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் இளைஞர் அணி திமுக சார்பில் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் நகர செயலாளர் கே. குமார் தலைமையிலும் முத்து முகமது புகாரி ஏற்பாட்டிலும் நடைபெற்றது. இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. எட்டயபுரம் தமிழ் பிரியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் மலர்விழி குமார், சிவலிங்கம், எஸ்.டி. பிரேம்சந்த், ஆண்டோ சிரில் ராஜ், சரளா தனசேகரன், நூருல் அமீன், புவன ராகவேந்திரன், ராஜசேகர் கருணாநிதி நவீன் தேவ பிரகாஷ் உதயகுமார் மற்றும் பலர்

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ம.அசோக்குமார் தலைமை!

## சென்னை கிழக்கில் மனிதநேய விழா; மாபெரும் கிரிக்கெட் போட்டி!

### இந்திய அணி முன்னாள் வீரர் ஆர்.ஜேசுராஜ் தொடங்கி வைத்தார்!

*சென்னை, மார்ச் 17 -*

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 24, சுழற்றி அடிக்கும் சூரியன்! தொடரும் வெற்றி நாயகன்!! எனும் தலைப்பில், மாபெரும் கிரிக்கெட் போட்டி நேற்று (16.03.2025) காலை 8.00 மணியளவில், பெரம்பூர், டான்பாஸ்கோ பள்ளியில் நடைபெற்றது.

இவ்விளையாட்டு போட்டியில் மாவட்ட விளையாட்ட மேம்பாட்டு அணி அமைப்பாளர் ம.அசோக்குமார் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர் பாபு, பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ. நாகராசன் மற்றும் கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார், டி.லோகேஷ், தேவஜவஹர், எஸ்.பன்னீர் செல்வம், எஸ்.தனசேகர், துரை கண்ணன், ஆர்.எஸ்.சித்திக், பி.பழனி, இள.இளங்கோவன், எம்.தாவுத்பீ, எஸ். கே.ரமேஷ், எல்.டி.தாமஸ், ந.பொன்முடி, டி.சந்திரசேகர், பி.டி.சி.ரவி, பி.ஊமைதுரை, கே.பி.ஆதவன்மணி. மாமன்ற உறுப்பினர்கள்: பி.அமுதா, சி.ஸ்ரீதணி, டி.யோகபிரியா, கே.சாரதா முன்னிலை வகித்தனர்.

எ.பாபுராஜன், வி. ஜெ.திலிப்ராஜ், எஸ்.வடிவேல், எம்.கமலநாதன், ஆர். சீனிவாசன், என்.மோகன்குமார், த.விஜயகுமார், பி.ஆர். யஷ்வந்த்குமார், கே.ஜெயகுமார், சி.லதா, எம்.இளங்கோவன், எ.விஜய் வரவேற்றனர்.





இம்மாபெரும் கிரிக்கெட் போட்டியை முன்னாள் இந்தியா ஏ அணி கிரிக்கெட் வீரர் ஆர். ஜேசுராஜ் போட்டியை துவக்கி வைத்து சிறப்பித்தார்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியாராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.சி, வே.கவுதமன், கே. ஜார்ஜ்குமார், . விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணைச் செயலாளர்கள்: எஸ். ஆர்.பார்த்திபன், சுரேஷ், ஜெ.மனோகரன், நிவேதா, ஜெசிகா, ஏ.வி.ஆர்.கோபால்ராம், எஸ்.கார்த்திக், வாசிம் முபாரக், தனஷ், எம்.குமார், நா.ஆனந்த், பி.கே.பாபு, முகமது இஸ்ரத். இரா.வீரமணி கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நலத்திட்ட விழாவில் பா.அன்பரசு நன்றி கூறினார்..